24.10.2024 ( துவங்கப்படும் நேரம் - 12.00)

பெயர் : சின்னப்பன் (P.W.1)
M.C.O.P. No.1/2023

முதல் விசாரணை தொடர்ச்சி

என்னிடம் காட்டப்படும் TN 43 7194 என்ற காரின் மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கை ம.சா.ஆ. 11 ஆகும். TN 43 4048 என்ற இரு சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கை ம.சா.ஆ. 12 ஆகும். சம்பவ இடத்தின் மாதிரி வரைபடம் ம.சா.ஆ. 13 ஆகும். மனு அனுமதிக்கப்பட வேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

**7** ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

விபத்து நடைபெற்ற சமயத்தில் நான் ஓட்டிச் சென்ற மோட்டார் வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து 21.02.2018 அன்று நடைபெற்றது என்றும் ஆனால் எனது இரு சக்கர வாகனத்திற்கான காப்பீடு 18.01.2018 அன்றே முடிவடைந்து விட்டது என்று சொன்னால் சரிதான். அதன் பிறகு 09.03.2018 அன்று தான் நான் காப்பீட்டை புதுப்பித்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். 7 ஆவது மனுதாரருக்கு எதிராக பரிகாரம் கோர நான் அருகர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. மனுவிலும் நான் 7 ஆம் மனுதாரருக்கு எதிராக எந்த பரிகாரமும் கோர வில்லை என்று சொன்னால் சரிதான். 7 ஆவது எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

2,3,4,6 மனுதாரர்களின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப் படுகிறது.